**புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**
(07-10-2015 – 11-10-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 06-10-2015

**கடந்த கால வானிலை 01-10-2015 முதல் 05-10-2015 வரை**

| **காரணிகள்** | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 57.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 22-26 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 56-94 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி ) | 6-15 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 11-10-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **07.10.15** | **08.10.15** | **09.10.15** | **10.10.15** | **11.10.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 2 | 3 | 0 | 0 | 1 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 82 | 80 | 78 | 78 | 80 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 78 | 80 | 76 | 76 | 80 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு |

குறுஞ்செய்தி :

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், மக்காச்சோளம் மற்றும் கரும்பு**

பருவம்: குறுவை- **நெல் பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவம், மக்காச்சோளம்- அறுவடை பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- நெல்லில் குலை நோயினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஹனோசான் 200 மி.லி. அல்லது டிரைசைகலசோல் 200 கிராம் தெளிக்கவும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏக்கருக்கு சூடோமோனோஸ் ப்ளூரசன்ஸ் 500 கிராம் பவுடரை 200 மி.லி. தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்கவும்.
- நெல் பயிரில் தாக்கும் பச்சைத் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த Phosalone 35% EC 120 ml/litre தெளிக்கவும்.
- குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனொபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால். அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேன்கோசெப் 2 கிராம்/ லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க அறிவுறுத்தப்படுகின்றன.